මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office (94)-11-2484500 (94)-11-2484600 (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. BD/RDS/106/07/04
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2016.12.30

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல: 03/2016**

அமைச்சின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,
பிரதேச செயலாளர்கள் யாவருக்கும்.

**திடீர் அனர்த்த நிலைமையின் போது ஆபத்திற்குள்ளான மக்களுக்கும் அனர்த்த ஆபத்தின் காரணமாக வசித்துவரும் இடங்களிலிருந்து அகற்றப்பட்ட மக்களுக்கும் நிவாரணம் வழங்குதல் மற்றும் சேதத்திற்குள்ளான பிரதேசங்களை சுமுக நிலைக்கு மாற்றுவதற்கான அறிவுரைகள்**

திடீர் அனர்த்த நிலைமைகளின் போது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் சேதத்திற்குள்ளான பிரதேசங்களை சுமுக நிலைக்குக் கொண்டுவருவதனையும் நோக்காகக் கொண்டு வெளியிடப்படுகின்ற இந்த சுற்றறிக்கை 2017.01.01 ஆம் திகதி முதல் செயன்வலுப்பெறுகின்ற அதேவேளை, நிதி அமைச்சினால் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 152(I), 152(II) மற்றும் 152(III) சுற்றறிக்கைகளை இத்தாள் இரத்துச் செய்யப்படுகின்றது.

**02.** திடீர் அனர்த்த நிலைமைகளின் போது அனர்த்த ஆபத்தினைக் குறைப்பதற்காக சகல மக்களையும் உள்ளடக்கும் விதமாக காப்புறுதித் திட்டமொன்றை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் இலங்கை காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் இந்த சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளின் காரணமாக இடம்பெயர்கின்ற, வீடுகளை இழக்கின்ற மற்றும் மரணமடைகின்ற நபர்கள் ஆகியோருக்காக நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இக்காப்புறுதிக் காப்பீட்டுத் திட்டம் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்படுகின்றமையினால் மாவட்ட செயலகத்திற்கு அல்லது பிரதேச செயலகத்திற்கு உரித்தான பிரதேசங்களை உள்ளடக்கும் விதமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அதன்கீழ் தொழிற்படுகின்ற நிறுவனமாகிய அனர்த்த நிவாரண சேவை நிலையம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு ஆகியவற்றைக் கூட்டிணைப்பதன் மூலம் திடீர் அனர்த்த நிலைமையின்போது நிவாரணங்களை வழங்குவதற்கு பிரதேச செயலாளர்களினாலும் மாவட்ட செயலாளர்களினாலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

**03. தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற சேதங்கள்**

வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, புயல், நிலநடுக்கம், சுனாமி, இடி முழக்கம், எதிர்பாராத விதமாக ஏதாவதொன்று வீழ்தல், கடும் காற்று ஆகியவற்றின் காரணமாக மரங்கள் உடைந்து வீழ்தல், மழை காரணமாக மதில்கள் உடைந்து வீழ்தல் மற்றும் அதற்குச்

சமனான ஏனைய இயற்கை அனர்த்தத்தைக் காரணமாகக் கொண்டு ஏற்படுகின்ற சகலவிதமான உயிர் மற்றும் சொத்துக்களுக்கான சேதம்.

03.1 காப்புறுதியின் மூலம் வழங்கப்படுகின்ற நிவாரணம் மற்றும் நன்மைகள்

(I) உயிர்ச் சேதம்

இயற்கை அனர்த்தத்தின் காரணமாக ஏற்படுகின்ற உயிர்ச் சேதத்திற்காக ஆளொருக்கு 100,000/= ரூபா அதிகபட்சத்திற்குட்பட்டு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(II) முழுமையான அங்கவீனநிலைக்கு உட்படுதல்

இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற இயற்கை அனர்த்தத்தின் காரணமாக ஏற்படுகின்ற முழுமையான அங்கவீனம் மற்றும் நிரந்தர அங்கவீன நிலைமைக்கு உட்பட்டவர்களுக்கு ஆளொருவருக்கு 100,000/= ரூபா அதிகபட்சத்திற்குட்பட்டு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(III) சொத்துக்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றுக்கான சேதம்

இயற்கை அனர்த்தத்தின் காரணமாக ஏற்படுகின்ற சொத்துக்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றுக்கான சேதத்தின் பொருட்டு குடும்பம் ஒன்றிற்கு 25,00,000/= ரூபா அதிபட்ச தொகைக்கு உட்பட்டு நட்டஈட்டுத் தொகையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளையில் வருடாந்த செலவு ரூபா 10 மில்லியனுக்குக் குறைந்த வியாபாரங்களுக்கும் இந்த நிவாரணம் உரித்தாகின்றது.

சொத்துக்களுக்கான சேதம் வெவ்வேறாகக் கணக்கிடப்பட்டு நன்மைகளின் எல்லைக்குள் பொடுப்பனவுகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(IV) உடனடி அனர்த்த நிவாரனம் / சமைத்த உணவுகள்

அரசாங்க அதிபர்கள் / மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகிய சகலரினாலும் திடீர் அனர்த்த நிலைமையின் காரணமாக வதிவிடங்களிலிருந்து அகற்றப்படுகின்ற மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் அதேபோன்று சேதத்திற்குள்ளான பிரதேசங்களை சுமுக நிலைக்குக் கொண்டுவருவதற்கும் மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும் நிவாரணம் வழங்கும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதன் பிரகாரம் அனர்த்த நிலைமைகளின் போது அனர்தத்திற்குள்ளான நபர்களை நிரந்தர வதிவிடங்களிலிருந்து அகற்றி தற்காலிக தங்குமிட நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள போது அவர்கள் அனைவருக்கும் வருமான மட்டங்களைக் கவனத்திற் கொள்ளாது சமைத்த உணவுகளை வழங்குதல் வேண்டும். அதன் பிரகாரம் ஆளொருவருக்கு நாளொன்றுக்கு 225/= ரூபா அதிகபட்ச தொகைக்கு உட்பட்டு செலவுகளை மேற்கொள்ள முடியும்.

பிரதேச செயலாளருக்கு தனது தற்துணிவின் பிரகாரம் அதிகபட்சமாக 03 நாட்கள் வரை சமைத்த உணவுகளை வழங்கக்கூடியதாக இருக்கின்ற அதேவேளையில், அன்றிலிருந்து அடுத்துவரும் 04 நாட்களுக்கு அரசாங்க அதிபரின் / மாவட்ட செயலாளரின் அனுமதியின் அடிப்படையில் வழங்கமுடியும். அதிலிருந்து அடுத்துவரும் மேலும் 07 நாட்கள் வரையில் நீடிப்பதற்குத் தேவையேற்படுமானால் அதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரிடம் விசாரித்து தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(V) உலர் உணவுகளை வழங்குதல்

உலர் உணவை வழங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டவுடன் தேவையின் அடிப்படையில் உலர் உணவு வழங்குவதனை ஆரம்பித்தல் வேண்டும். அனர்த்த நிலைமையின் கீழ் நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற குடும்பங்களுக்கும் நலன்புரி நிலையங்களுக்கு வராது தமது வீடுகளிலோ அல்லது உறவினர்களின் வீடுகளிலோ இருக்கின்ற

குடும்பங்களுக்காகவும் சமைத்த உணவுகளை வழங்குகின்ற கால எல்லைக்குச் சமனான காலப்பகுதிக்கு உலர் உணவுகளை வழங்குதல் வேண்டும்.

**உலர் உணவின்பொருட்டு வாரமொன்றுக்கு செலவிடக்கூடிய அதிகபட்ச தொகை**

| | ரூபா |
|---|---|
| தனிநபர் ஒருவருக்கு | 700 |
| 2 உறுப்பினர்களைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு | 900 |
| 3 உறுப்பினர்களைக்கொகண்ட குடும்பம் ஒன்றிற்கு | 1,100 |
| 4 உறுப்பினர்களைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு | 1,300 |
| 5 உறுப்பினர்களைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு | 1,500 |

உலர் உணவு வழங்குவதற்காக பலநோக்கு கூட்டுறவுச் சங்க மற்றும் சதொச (கூ.மொ.வி) விற்பனை நிலையங்களின் மூலம் நேரடியாகவும், அதற்கு மேலதிகமாக பெறுகை வழிகாட்டலின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டு வெளிவாரியான வழங்குனர்களிடமிருந்தும் கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும்.

**03.2 இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வசதிகளை வழங்குவதற்குப் பின்பற்றவேண்டிய முறைமைகள்**

(I) திடீர் அனர்த்த நிலைமைகளின் போது ஆபத்திற்குள்ளானவர்களுக்கும் அதேபோன்று அனர்த்த அபாய நிலைமையொன்று ஏற்படுவதன் காரணமாக இடம்பெயர்கின்ற நபர்களுக்காகவும் மிகத் துரிதமாக நிவாரணங்களை வழங்குவதற்கு பிரதேச செயலாளர்கள் / மாவட்ட செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றைக் கூட்டிணைத்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(II) சகல பிரதேச செயலாளர்களினாலும் அனர்த்த நிலைமை ஏற்பட்டவுடன் தேவையான முற்பணத் தொகைகளைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு அனர்த்த நிலைமை பற்றியும் தேவையான முற்பணத் தொகை பற்றியதுமான தகவல்களை மாவட்ட செயலாளர் அரசாங்க அதிபர் ஊடாக அனர்த்த முகாமைத்து அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். அதேபோன்று சகல அனர்த்த நிலைமைகளையும் முகாமை செய்வதற்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுடன் தொடர்புகொண்டு மாவட்ட செயலாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(III) அனர்த்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்தவுடன் அனர்த்தத்தின் மூலம் ஏற்பட்ட சேதத்தை மீள்நிரப்பல் செய்வதற்காக உரிய சகல விபரங்களையும் அனர்த்தம் ஏற்பட்டு 02 மாதங்களுக்குள் (மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய சகல விபரங்களும்) தொடர்புடைய பிரதேச செயலாளர்களினால் தமது மாவட்ட செயலாளரினூடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அதேவேளை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அந்த விபரங்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பி மீள்நிரப்பல் செய்வதற்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

**04. காப்புறுதித் திட்டம் உள்ளடங்காத பின்வரும் அனர்த்த நிலைமையின்போது தேவையான நிவாரணங்களை வழங்குதல்**

காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்படாத வரட்சிக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு குறித்த அனர்த்தம் பற்றிய விபரங்களை தொடர்புடைய பிரதேச செயலாளரினால் தமது மாவட்ட செயலாளரினூடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும். அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அந்தக் கோரிக்கை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் பொதுத் திறைசேரிக்கு அனுப்பிய பின்னர் தேவையின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றது.

திடீர் வரட்சி நிலைமையின்போது குடிநீரை வழங்குவதற்குத் தேவையான தொகையை பொதுத் திறைசேரியினால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன்பிரகாரம் மாவட்ட செயலாளர்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரிடம் விசாரித்து தேவையான நடவடிக்கைகளை கூட்டிணைப்பு செய்துகொள்ளுதல் வேண்டும்.

05. மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

05.1 சிறிய அளவிலான மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

திடீர் அனர்த்த நிலைமையின் போது சேதத்திற்குள்ளான சிறிய அளவிலான கிராமிய பாதைகள், சிறிய குளங்கள், அணைக்கட்டுகள், பாலங்கள் போன்ற கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பு செய்வது தொடர்புடைய மாவட்ட செயலாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் தேவையான மேலதிக ஏற்பாடுகளை பொதுத்த திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர் அந்த நடவடிக்கைகளை துரிதமாக முடிவுருத்துவதற்கு மாவட்ட செயலாளர்கள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

05.2 பாரியளவிலான மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

திடீர் அனர்த்த நிலைமையின் போது நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் சேதத்திற்குள்ளாகின்ற பாரியளவிலான உட்கட்மைப்பு வசதிகளை மறுசீரமைக்கும் பொறுப்பு தொடர்புடைய நிரல் அமைச்சுகளுக்கு ஒப்படைக்கப்படுகின்றது. இதற்காக அந்தந்த மாவட்டங்களில் சேதத்திற்கு உள்ளான உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பதற்கு செலவாகின்ற செலவினங்களை மதிப்பீடு செய்து தற்சமயம் இருக்கின்ற ஏற்பாடுகளினூடாக அல்லது தேவைப்படும் பட்சத்தில் பொதுத் திறைசேரியின் மேலதிக ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அந்த நடவடிக்கைகள் தொடர்புடைய நிரல் அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

06. இந்த சுற்றறிக்கை தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படுமானால் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் (தொலைபேசி இல: 011-2484665) விசாரித்தல் வேண்டும்.

**ஒப்பம்/ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்
5. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்
6. சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர்
7. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்
8. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவர்
9. கணக்காய்வாளர் அதிபதி

} தொடர்புடைய அலுவலர்களுக்குத் தேவையான அறிவுருத்தல்களை வழங்குவதற்காக